| அசல் வழக்கு எண். 198/2018 | | பி.சா .1 | தேதி. 24.6.2022 |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரங்கராஜ் | வயது | 62 |
| த/பெ. | திரு. மாதைய்ய கவுடர் | கிராமம் | சிக்கதாசம்பாளையம் , குத்தாரிபாளையம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

சர்வே எண். 747/2 சம்பந்தபட்ட சொத்தைப் பொறுத்து தான் இந்த வழக்கு என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண்ணில் மொத்த பூமி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அந்த சர்வே எண்ணில் மொத்த பூமி 3 ஏக்கர் 74 செண்ட் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த பூமி யார்யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கும், என் தம்பி பத்திரப்பன், மற்றொரு தம்பி சுப்பையம், மற்றொரு தம்பி நாகராஜ் ஆகியோருக்கும் பாத்தியப்பட்டது. யார்யாருக்கு எவ்வளவு பரப்பளவு என்றால் கொஞ்சம் முன்னபின்ன இருக்கும். என்னுடைய 1 ஏக்கர் 61 சென்ட். மற்றவர்களுக்கு எவ்வளவு என்றால் ஒருத்தருக்கு 1.80 இன்னொருத்தருக்கு 1.70 , இன்னொருத்தருக்கு 1.30. மேற்கண்ட சர்வே எண்ணில்நான் சொல்லும் அளவிற்கு மொத்த பரப்பளவே கிடையாது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள நிலத்தில் 87 சென்ட் எனக்கு பாத்தியப்பட்டது. அந்த 87 சென்ட் நிலத்தை வாதி சண்முக சுந்திரத்திடம் நான் விலைக்கு வாங்கினேன். அந்த சர்வேஎண்ணில் 747/1, 747/2 என இரண்டு பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். 747/1 ல் 3 ஏக்கர் 64 சென்ட்டும் 747/2 ல் 10 சென்ட்டும் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சர்வே எண் 747 ல் கிழபுறத்தில் 747/2 ல் உள்ள வண்டித்தடம் உள்ளது என்றால் வண்டி பாதை உள்ளது. பள்ளவாரில் இருந்து மேலே மலைக்கு போகும் வரை வண்டிபாதை உள்ளது. அந்த வண்டி பாதையானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பொதுவாக பாத்தியப்பட்டதாகும். சர்வே எண். 747 ல் உள்ள பாதை பொதுவான பாதை இல்லையென்றால் சரியல்ல. சர்வே எண். 747 க்குரிய பூமியானது ஆரம்பத்தில வெங்கடராம கவுடர், மாரண்ண கவுடர் வகையறாவுக்கு பாத்தியப்பட்டதென்றால் சரிதான். அவர்களிடமிருந்து வாதி வாங்கி அதன் பிறகு நான் கிரையம் வாங்கி கொண்டேன். சர்வே எண். 747 ல் வாதி சண்முக

சுந்தரத்திற்கு இன்னும் பூமி உள்ளதென்றால் எனக்கு 87 செண்ட் உள்ளது. அவருக்கு பூமி உள்ளதா இல்லையா என்பதை அவரிடம் தான் கேட்கவேண்டும் எனக்கு தெரியாது. அந்த சர்வே எண்ணில் வாதிக்குள்ள 1 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் 87 செண்ட் நிலத்தை எனக்கு விற்றது போக மீதி 50 செண்ட் தான் வாதிக்குள்ளது என்றால் அது அவருக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. வாதிக்கு அந்த சர்வே எண்ணில் 50 செண்ட் நிலம் உள்ளது எனக்கு தெரியும் என்றும் அதை தெரிந்து கொண்டே வழக்கிற்காக வேண்டி தெரியாதென பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண். 747 க்கு வடக்கு பக்கம் சர்வே எண். 748 க்குரிய நிலம் உள்ளதென்றால் சரிதான். அந்த நிலம் எனக்கு பாத்தியப்பட்டதென்றால் சரிதான். 748/2 ல் கிழபுறம் தென்வடலாக வண்டித்தடம் உள்ளதென்றால் சரிதான். மேற்கண்ட வண்டித்தடமானது எனக்கு மட்டும் பாத்தியப்பட்டதா அல்லது பொது வண்டித்தடமா என்றால அது பொது வண்டித்தடம் ஆகும். அந்த வண்டித்தடத்தின் வழியாக சர்வே எண் 749 க்கு பொது மக்கள்போய் வருகிறார்களா என்றால் காலங்காலமாக போய்வருகிறார்கள். 749 முடிந்த பிறகு மலை தான் உள்ளதென்றால் சரிதான். 749 ல் எனக்கு பூமி கிடையாது. 748 க்கு அடுத்ததாக 749 மட்டும் தான் உள்ளதென்றும் அதற்கடுத்தாற் போல் மலை உள்ள நிலையில் பொது மக்கள் அந்த பாதையை பயன்படுத்த வாய்ப்பே இல்லையென்றும் பொது மக்கள் பயன்படுத்தி வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 747/2 ல் கிழபுறத்தில் உள்ள தென்வடல் வண்டிப்பாதையை நான் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக அதற்கு வடபுறத்தில் உள்ள 748/2 ல் கிழபுறத்தில உள்ள தென்வடல் பாதையை பொதுமக்கள் பயன்படுத்துவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 747/2 ல் உள்ள வண்டிப்பாதையானது 747 ல் உள்ள பூமி உரிமையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதென்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது).

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.06.27 16:08:55 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.